RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-5 | இதழ்- 19 | ஜனவரி.26 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

சென்னையில் ஆளுநர் ஆர்.என்.ரவி தேசியக் கொடியை ஏற்றினார் குடியரசு தின விழா கோலாகலம்

சென்னை: ஜன.26-

நாடு முழுவதும் குடியரசு தின விழா இன்று உற்சாகத்துடன் கொண்டப்படுகிறது. சென்னை மெரினாவில் நடைபெற்ற விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி தேசியக் கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

நாட்டின் 77வது குடியரசு தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, சென்னை மெரினா கடற்கரை காமாஜர் சாலையில் உழைப்பாளர் சிலை எதிரே காலை 8 மணி அளவில் குடியரசு தின விழா நடைபெற்றது. இதில் தேசியக் கொடியை ஆளுநர் ஆர்.என். ரவி ஏற்றிவைத்தார். அப்போது ஹெலிகாப்டரில் இருந்து மலர் தூவப்பட்டது. தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

பின்னர் ராணுவ படைப் பிரிவு, கடற்படை பிரிவு, ராணுவ கூட்டுக் குழல் முரசு இசைப் பிரிவு, வான்படை பிரிவினரின் அணிவகுப்பு மரியாதையை ஆளுநர் ஏற்றுக்கொண்டார். இதன்பிறகு, அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நடைபெறும். பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளின் பாரம்பரிய நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அதன் பின்னர், வீரதீர செயலுக்கான அண்ணா பதக்கங்களை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

இதில் துணை உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், தலைமைச் செயலர் உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

ஓபிஎஸ் ஆதரவாளர் தர்மர் எம்.பி அதிமுகவில் இணைந்ததன் பின்னணி என்ன?

சென்னை, ஜன.26-

தேர்தல் தொடர்பாக ஓ.பன்னீர் செல்வம் முடிவெடுப்பதில் தாமதம் ஏற்பட்டு வருவதாலும், தனது எம்.பி. பதவியை தக்க வைப்பதற்காகவும் தர்மர், அதிமுகவில் இணைந்ததாக அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

அதிமுகவை சேர்ந்த தர்மர் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் வைத்திலிங்கம், மனோஜ் பாண்டியன், அய்யப்பன் ஆகியோர், முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வத்தின் ஆதரவாளர்களாக இருந்து. அதிமுக தொண்டர்கள் மீட்புக் குழு நிர்வாகிகளாக செயல் பட்டனர். சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், ஓபிஎஸ் சரியான முடிவு எடுக்காமல் காலம் தாழ்த்தி வருவதாகக் கூறப் படுகிறது. எனவே. எம்எல்ஏ. க்களான வைத்

திலிங்கம். மனோஜ் பாண்டியன் ஆகியோர் தங்களது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு திமுகவில் இணைந்தனர்.

அதிமுகவில் ஓபிஎஸ் ஆதர வாளர் ஆர்.தர்மரும், பழனி சாமியின் ஆதரவாளரான சி.வி.சண்முகமும் 2022 ல் மாநிலங்களவை எம்.பி.யாக நியமிக்கப்பட்டனர். அதை யடுத்து உட்கட்சி பிரச்சினையில், ஓபிஎஸ் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். அதன் பின்னரும், அவரது ஆதரவாளராக தர்மர் தொடர்ந்து செயல்பட்டார்.

இருப்பினும், தர்மர் கட்சியிலிருந்து நீக்கப்படாமல் அதிமுக எம். பி. யாக தொடர்ந்தார். இந்நிலையில் 2028 ஜூன் வரை எம்.பி. பதவி இருப்பதால், தர்மர் அப்பதவியை தக்க வைக்க பழனிசாமியை சந்தித்து அதிமுகவில் இணைந்துவிட்டார் என, அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர். ஓபிஎஸ் பின்னால் சென்றால் தனது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் எனக் கருதி, தர்மர் அதிமுகவில் இணைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தர்மருக்கு எம்.பி. பதவியை வலியுறுத்தியதால்தான் ஓபிஎஸ் மற்றும் பழனிசாமி இடையே கருத்து வேறுபாடு ஏற் பட்டதாக அப்போது பேசப் பட்டது. ஆனால், தர்மர் இன்று அதிமுகவில் இணைந்து பழனி சாமியுடன் கைகோத்துள்ளார் என, ஓபிஎஸ் ஆதரவாளர்கள் கூறினர்.

தமிழகத்தைச் சேர்ந்த 14 பேர் உட்பட 131 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிப்பு

புதுடெல்லி: ஜன.26-

குடியரசு தினத்தை முன்னிட்டு தமிழகத்தைச் சேர்ந்த 14 பேர் உட்பட மொத்தம் 131 பேருக்குபத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கேரள முன்னாள் முதல்வர் அச்சுதானந்தன், இந்தி நடிகர்தர்மேந்திரா, கிரிக்கெட் வீரர் ரோஹித் சர்மா, எழுத்தாளர் சிவசங்கரி, சென்னை ஐஐடி இயக்குநர் காமகோடி உள்ளிட்டோர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். விருதாளர்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். மார்ச் அல்லது ஏப்ரலில் நடைபெற உள்ள விழாவில் விருதுகளை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வழங்குவார்.

குடியரசு தினத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் அறிவிக்கப்படும் உயரிய சிவிலியன் விருதுகளில் ஒன்று பத்ம விருதுகள். பத்ம விபூஷண், பத்ம பூஷண், பத்ம ஆகிய 3 பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. கல்வி, இலக்கியம், அறிவியல், மருத்துவம், விளையாட்டு, சுகாதாரம், தொழில், வர்த்தகம், பொறியியல், பொது விவகாரங்கள், குடிமைப் பணி, சமூக சேவைஉள்ளிட்ட பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களை கவுரவிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

குடியரசு தினத்துக்கு முந்தைய நாளான 25ம் தேதிபத்ம விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பட்டியல் வெளியிடப்படுவது வழக்கம். அந்த வகையில், இந்த ஆண்டுக்கான பட்டியலை மத்திய உள்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்டது. இதில், 5 பேருக்கு பத்மவிபூஷண், 13 பேருக்கு

பத்மபூஷண், 113 பேருக்கு பத்மஸ்ரீ என மொத்தம் 131 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் 19 பேர் பெண்கள். 6 பேர் வெளிநாட்டினர் அல்லது வெளிநாடு வாழ் இந்தியர்கள். 16 பேருக்கு மறைவுக்குபிந்தைய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

5 பேருக்கு பத்ம விபூஷண்: இந்தி நடிகர் தர்மேந்திரா (மறைவு), உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.டி.தாமஸ், வயலின் கலைஞர் என்.ராஜம், பி.நாராயணன் (இலக்கியம், கல்வி), கேரள முன்னாள் முதல்வர் அச்சுதானந்தன் (மறைவு) ஆகிய 5 பேர் பத்ம விபூஷன் விருதுக்கு தேர்வாகி உள்ளனர்.

13 பேருக்கு பத்ம பூஷண்: பாடகி அல்கா யக்னிக், பகத் சிங் கோஷ்யாரி, மருத்துவர் கள்ளிப்பட்டி ராமசாமி பழனிசாமி, நடிகர் மம்முட்டி, டாக்டர் நோரி தத்தாத்ரேயுடு, பியூஷ் பாண்டே (மறைவு), எஸ்கேஎம் நிறுவனர் மயிலானந்தன், சதாவதனி ஆர்.கணேஷ், ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் சிபு சோரன் (மறைவு), தொழிலதிபர் உதய் கோட்டக், வி.கே.மல்ஹோத்ரா (மறைவு), வெள்ளப்பள்ளி நடேசன், டென்னிஸ் வீரர் விஜய் அமிர்தராஜ் ஆகிய 13 பேர் பத்ம பூஷண் விருதுக்கு தேர்வாகி உள்ளனர்.

113 பேருக்கு பத்மஸ்ரீ: நடிகர் மாதவன், மகளிர் கிரிக்கெட் அணி கேப்டன் ஹர்மன்ப்ரீத் கவுர், இந்தி நடிகர் சதிஷ் ஷா (மறைவு), கிரிக்கெட் வீரர் ரோஹித் சர்மா, ஹாக்கி வீராங்கனை சவிதா பூனியா, புதுச்சேரியைச் சேர்ந்த சிலம்பக் கலைஞர் கே.பழனிவேல் உட்பட 113 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 14 பேருக்கு.. தமிழகத்தைச் சேர்ந்த 2 பேருக்கு பத்ம விபூஷண், 11 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு பத்மஸ்ரீ விருதை 2 பேர் பங்கிட்டுக் கொள்கின்றனர். அந்த வகையில், தமிழகத்தைச் சேர்ந்த மொத்தம் 14 பேர் பத்ம விருதுகளைப் பெறுகின்றனர்.

பத்ம பூஷண்: கள்ளிப்பட்டி ராமசாமி பழனிசாமி (மருத்துவம்), எஸ்கேஎம். மயிலானந்தன் (சமூக சேவை).

பத்மஸ்ரீ: கர்னாடக இசைப் பாடகிகள் ரஞ்சனி காயத்ரி சகோதரிகள் (கலை), முன்னாள் அமைச்சர் எச்.வி. ஹண்டே (மருத்துவம்), கே.ராமசாமி (அறிவியல், பொறியியல்), முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி கே.விஜயகுமார் (குடிமைப்பணி), ஓதுவார் திருத்தணி சுவாமிநாதன் (கலை), புண்ணியமூர்த்தி நடேசன் (மருத்துவம்), ஆர்.கிருஷ்ணன் (கலை மறைவு), ராஜாஸ்தபதி காளியப்ப கவுண்டர் (கலை), எழுத்தாளர் சிவசங்கரி (இலக்கியம், கல்வி), மிருதங்க வித்வான் திருவாரூர் பக்தவத்சலம் (கலை), சென்னை ஐஐடி இயக்குநர் வீ.காமகோடி (அறிவியல், பொறியியல்) ஆகியோர் விருது பெறுகின்றனர்.

பிரதமர் மோடி வாழ்த்து: பத்ம விருதாளர்கள் அனைவருக்கும் பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். அவர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியுள்ளதாவது: நாட்டுக்கு ஆற்றிய அளப்பரிய பங்களிப்புக்காக பத்ம விருது பெறும் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள். பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் தங்களது பண்பு, அர்ப்பணிப்பு மற்றும் சேவை ஆகியவை நமது சமூகத்தின் கட்டமைப்பை வலுப்படுத்துகின்றன. இந்த கவுரவம், வரும் தலைமுறையினரைத் தொடர்ந்து ஊக்குவிக்கும் அர்ப்பணிப்பு மற்றும் மேன்மையின் உணர்வைப் பிரதிபலிக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் வழங்குவார்: பத்ம விருதுகள் வரும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெறும் விழாவில் வழங்கப்படும். விருதுகளை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வழங்கி கவுரவிப்பார்.

“எதிர்கால தமிழகத்தின் ஹீரோவும் விஜய்தான்” செங்கோட்டையன்

சென்னை, ஜன.26-

“8 கட்சிகள் கூட்டணி, 10 கட்சிகள் கூட்டணியை முறியடிக்கும் சக்தி விஜய்க்கு மட்டும்தான் உண்டு. அவர் திரைப்படத்தில் மட்டும் ஹீரோ அல்ல, எதிர்கால தமிழகத்தின் ஹீரோவும் தான்.” என தவெக நிர்வாகக் குழு ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

தவெகவின் செயல்வீரர்கள் கூட்டம் அக்கட்சியின் தலைவர் விஜய் தலைமையில் மாமல்லபுரத்தில் நடைபெறுகிறது.

அதில் செங்கோட்டையன் பேசும்போது, “தூங்கிக் கொண்டிருப்பவர்களின் காதுகளில் சென்று விசில் அடித்துவிடாதீர்கள், ஓட்டு போய்விடும். பேருந்து நிலையங்களில், வயதானர்கள் இருக்கும் இடத்தில் திடீரென விசில் அடித்தால் அவர்கள் தடுமாறிப் போய்விடுவார்கள். பேருந்தில் பயணம் செய்யும் போது கண்டக்டர்களும் விசில் அடிக்கமாட்டார்கள் என்ற நிலை உருவாகும்.

8 கட்சிகள் கூட்டணி, 10 கட்சிகள் கூட்டணியை முறியடிக்கும் சக்தி விஜய்க்கு மட்டும்தான் உண்டு. திரைப்படத்தில் மட்டும் ஹீரோ அல்ல, எதிர்கால தமிழகத்தின் ஹீரோவும் தான்.

திமுக, அதிமுக என எந்தக் கட்சிக்காரர்களின் வீட்டிற்கு சென்றாலும் அங்கே தவெகவிற்குதான் ஓட்டு என சொல்கிறார்கள். யாரை கேட்டாலும் தவெகவுக்கு தான் ஓட்டு என்கிறார்கள். திமுகவை வீழ்த்தக்கூடிய ஒரே தலைவர் விஜய்தான்.

நாளை தமிழகத்தில் நல்லாட்சி கொடுக்கக்கூடிய ஆற்றலும், சிந்தனையும், தொலைநோக்கு பார்வையும், மனிதநேயமும், சாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கக்கூடிய ஒரே தலைவர் தளபதி மட்டும் தான் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இது அனைவருக்கும் தெரியும். எந்த சக்தியாலும் இனி தமிழகத்தில் நம்மை தடுத்து விட முடியாது. அவர் முதல்வராக வருவதை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது”. இவ்வாறு அவர் பேசினார்.

இளைஞரை சுட்டுக் கொன்ற அமெரிக்க குடியேற்ற அதிகாரிகள்: ஷாக் சம்பவமும் பின்னணியும்!

நியூயார்க், ஜன.26-

அமெரிக்காவின் மினியாபொலிஸ் பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்ட 37 வயதான அலெக்ஸ் ஜெஃப்ரி பிரெட்டியை குடியேற்ற அதிகாரிகள் 6 பேர் சூழ்ந்து கொண்டு துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற புதிய வீடியோ வெளியாகி உள்ளது. இது சர்வதேச அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மினியாபொலிஸ் பகுதியில் கடந்த 7ம் தேதி அன்று அமெரிக்க குடியேற்ற அதிகாரி ஒருவர், ரெனி குட் என்ற பெண்மணியை சுட்டுக்கொன்றனர். இது தேசிய அளவில் மக்களை கொதிப்படைய செய்தது. அதனால் அமெரிக்காவில் மக்கள் போராட்டம் ஏற்பட்டது. அந்த வகையில் மினியாபொலிஸ் பகுதியிலும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் 37 வயதான அலெக்ஸ் ஜெஃப்ரி பிரெட்டியும் பங்கேற்றதாக தகவல். செவிலியராக மருத்துவமனை ஒன்றில் அவர் பணியாற்றி வந்தார். அப்போது அவரை குடியேற்ற அதிகாரிகள் சுட்டுக் கொன்றனர். இந்த சம்பவத்தின் வீடியோ காட்சி சமூக வலைதளத்தில் தற்போது வெளியாகி உலக அளவில் கவனம் பெற்றுள்ளது.

அந்த வீடியோவில் அலெக்ஸை சூழ்ந்த குடியேற்ற அதிகாரிகள், அவரை தரையில் தள்ளி, அவரிடம் இருந்த உரிமம் பெற்ற துப்பாக்கியை பறித்தனர். அதன் பின்னர் அவரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இதையடுத்து உடல் அசைவற்று அலெக்ஸ் காணப்பட்டார். அப்போதும் அவரை சூழ்ந்திருந்த அதிகாரிகள், துப்பாக்கியை அவரை நோக்கி குறி வைத்திருந்தனர்.

“அய்யோஞ் நீங்கள் என்ன செய்துள்ளீர்கள். யாரேனும் ஆம்புலன்ஸை கூப்பிடுங்கள். அவசர உதவி எண்ணை தொடர்பு கொள்ளுங்கள். என்னால் இதை நம்ப முடியவில்லை” என அந்த வீடியோவை படம் பிடித்த பெண் பதறுவதும் அதில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக வெளியான மற்றொரு வீடியோவில் துப்பாக்கி சூட்டுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட பெண்ணை அதிகாரி ஒருவர் தரையில் தள்ளி உள்ளார். அந்த பெண்ணுக்கு அலெக்ஸ் உதவ சென்றுள்ளார். அப்போது அவரை பிடித்த அதிகாரிகள், அவரை தனியே இழுத்து வந்தனர். அதன் பின்னர்தான் அவரை அதிகாரிகள் சுட்டுக்கொன்றனர்.

இந்த சம்பவத்தை அடுத்து குடியேற்ற அதிகாரிகளை நோக்கி ஒரு நபர் துப்பாக்கி உடன் வந்ததாகவும், அதையடுத்து தற்காப்புக்காக அதிகாரிகள் அவரை சுட்டதாகவும் அமெரிக்க அரசு தரப்பு விளக்கம் கொடுத்துள்ளது. இது ட்ரம்ப் அரசின் சட்டவிரோத குடியேற்ற தடுப்பு நடவடிக்கையின் போது நடந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அரசு இந்த போக்கை நிறுத்த வேண்டும் என மினியாபொலிஸ் ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

ஏரியூர் அருகே உள்ள சிகரல அள்ளியில் கோலாகலமாக தொடங்கிய ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலய திருவிழா

ஏரியூர், ஜன.26- தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அருகே உள்ள அஜ்ஜன அள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட சிகரல அள்ளியில் எழுந்தருளியுள்ள அன்னை ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலய 38 ம் ஆண்டு திருவிழா நேற்று தொடங்கியது.

ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலய தர்மகர்த்தா அழகேசன் அவர்கள் மேளதாளங்கள் முழங்க செண்டை மேளத்துடன் வானவேடிக்கையுடன் கோவில் முன்பு அமைந்துள்ள பிரம்மாண்ட கொடி மரத்தில் கொடியேற்றி வைத்து சிறப்பு பூஜைகள் செய்து விழாவை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊர் செட்டியார் தேவன், நாலூர் செட்டியார் நஞ்சா செட்டி, செயலாளர் அப்பையன், பொருளாளர் கணேசன், மற்றும் 24 மணை தெலுங்கு செட்டியார்கள் மாவட்ட தலைவர் குமார், சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர், நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோவில் விழா குழுவினர் மேற்கொண்டிருந்தனர்.

கட்டிக்குளம் முருகன் கோவில் நிலைக்கால் வைபவம்: பிப்ரவரி 1ல் நடைபெறுகிறது

மானாமதுரை ஜன 26- சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளால் ஏற்படுத்தப்பட்ட கருப்பனேந்தல் மடம் தவச்சாலையில், சுவாமிகள் முதன்முதலில் ஜீவ ஒடுக்கமான இடத்தில் அருள்பாலிக்கும் அருள்மிகு முருகன் கோவில் கருங்கல் திருப்பணி தற்போது நடைபெற்று வருகிறது.

நிகழ்ச்சி விவரங்கள்: இந்தத் திருப்பணியின் முக்கிய நிகழ்வான நிலைக்கால் வைபவம் வருகின்ற 01.02.2026 (ஞாயிற்றுக்கிழமை) தை மாதம் 18ஆம் தேதி நடைபெற உள்ளது. * நேரம்: காலை 10.30 மணி முதல் 11.30 மணிக்குள்.

* இடம்: கருப்பனேந்தல் மடம் தவச்சாலை, கட்டிக்குளம்.இந்த ஆன்மீக நிகழ்வில் மெய்யன்பர்கள் அனைவரும் திரளாகக் கலந்து கொள்ளுமாறு கருப்பனேந்தல் மடம் தவச்சாலை நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தொடர்புக்கு: மேலதிக விவரங்களுக்கு 81221 41659 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்.

சோழிங்கநல்லூர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் மகளிர் உடற்பயிற்சி கூடத்தை சென்னை மாநகராட்சி மேயர், பிரியாராஜன் தலைமையில் திறப்பு

சோழிங்கநல்லூர் ஜன 26,- சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்க நல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15ல் உள்ளடங்கிய வார்டு எண்: 199 சோழிங்கநல்லூர் (24.01.26) அன்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் மகளிருக்கான ரூபாய் : 1 கோடியே 25 லட்சம் மதிப்பீட்டில் மூன்று உடற்பயிற்சி கூடத்தை சென்னை மாநகராட்சி மேயர்., பிரியா ராஜன் மற்றும் வட்டார துணை ஆணையர் (தெற்கு) அஃதாப் ரசூல் ஆகியோர் திறந்து வைத்தார்கள். இந்த நிகழ்வில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர்., எஸ். அரவிந்த் ரமேஷ் மற்றும் 15 வது மண்டல குழு தலைவர்., வி. இ. மதியழகன் மற்றும் 199 வது மாமன்ற உறுப்பினர்., ஜி. சங்கர் உடன் இருந்தனர்.

present sale for all over Tamil Nadu
தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி முதல்வருக்கு கடிதம் வேலூரில் இந்து மக்கள் கட்சி சார்பில் நூதன போராட்டம்

வேலூர் ஜன 26- வேலூர் மாவட்டத்தில் தமிழகத்தில் மும்மொழி கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்,தாய்மொழிக் கல்வியைக் கட்டாயமாக்கி, அனைத்துப் பாடப்பிரிவுகளையும் தாய்மொழி தமிழிலேயே கற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, இந்து மக்கள் கட்சி (தமிழகம்) சார்பில் தமிழக முதல்வருக்கு கடிதம் அனுப்பும் போராட்டம் வேலூரில் நடைபெற்றது.

வேலூர் தலைமை தபால் நிலையத்திலிருந்து நடைபெற்ற இந்த நிகழ்விற்கு, இந்து மக்கள் கட்சியின் வேலூர் மாவட்டத் தலைவர் அச்சுதன் ஆச்சாரி தலைமையில் நடைபெற்றது. இதில் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழக முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் 50க்கும் மேற்பட்ட கடிதங்களை அவர்கள் தபால் மூலம் அனுப்பி வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பாளர் விஜய் குமார், மாவட்டத் துணை தலைவர் கார்த்திகேயன், மாவட்ட செயலாளர் நவீன் குமார். மாவட்டத் துணைத் தலைவர் பழனி வேலன், ஒன்றிய தலைவர் பிச்சாண்டி மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

■ சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தாலுகா அமராவதி புதூர் பஸ் நிறுத்தம் சிஐடியு ஆட்டோ சங்கம் கிளை ஆண்டு பேரவைக் கூட்டம் தலைவர் மு. கருணாநிதி தலைமையில் (ஜன24) காலை 1100 மணிக்கு ஆட்டோ சங்கம் மாவட்ட பொருளாளர் குமாரவேல், மாவட்ட துணை தலைவர் வெங்கிட்டு பங்கேற்புடன் நடைபெற்றது. கிளைக்கு புதிய நிர்வாகிகளாக தலைவர் சுரேஷ் துணை தலைவர் ஷி.நாகராஜ் செயலாளர் ராஜா துணை செயலாளர் ரிஸி. நாகராஜ் பொருளாளர் ரிஸி. குமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். புதிய நிர்வாகிகளுக்கு சிஐடியு ஆட்டோ சங்கம் மாவட்ட குழு சார்பாக பாராட்டுக்கள் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது

ஃபிட் இந்தியா இயக்கம்: சிவகங்கை ஐ.டி.பி.பி சார்பில் "சைக்கிள் பயணம்" விழிப்புணர்வு நிகழ்ச்சி

சிவகங்கை ஜன 26,- மத்திய அரசின் 'ஃபிட் இந்தியா' (Fit India Movement) இயக்கத்தின் ஒரு பகுதியாக, சிவகங்கை இலுப்பக்குடியில் உள்ள இந்திய திபெத் எல்லை பாதுகாப்புப் படை (ITBP) பயிற்சி மையத்தின் சார்பில் "Sundays on Cycle" (ஞாயிற்றுக்கிழமைகளில் சைக்கிள் பயணம்) என்ற விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது.

முக்கிய அம்சங்கள்: * தலைமை: இந்த சைக்கிள் பயணத்தை ஐ.டி.பி.பி டி.ஐ.ஜி (DIG) டி. ஜஸ்டின் ராபர்ட் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார்.

* பங்கேற்பாளர்கள்: இதில் ஐ.டி.பி.பி அதிகாரிகள் மற்றும் வீரர்கள் உட்பட சுமார் 100க்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

* பயண தூரம்: இலுப்பக்குடி கிராமத்தின் வழியாக சுமார் 10 கிலோமீட்டர் தூரம் இந்த சைக்கிள் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

நோக்கம்: இந்த விழிப்புணர்வு இயக்கமானது பொதுமக்களிடையே பின்வரும் ஆரோக்கியமான நடைமுறைகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்டது: * உடல் தகுதி மற்றும் கலாச்சாரம்: அன்றாட வாழ்வில் உடற்பயிற்சியின் அவசியத்தை வலியுறுத்துதல்.

* சாலை பாதுகாப்பு: பாதுகாப்பான பயண முறைகள் குறித்த விழிப்புணர்வு.

* சுற்றுச்சூழல் பாதுகாப்பு: எரிபொருள் பயன்பாட்டைக் குறைத்து, சுற்றுச்சூழல் நட்பு முறையான சைக்கிள் ஓட்டுதலை ஊக்குவித்தல்.

* சமூக நல்லுறவு: குடிமக்களிடையே ஒற்றுமை மற்றும் நட்புணர்வை வளர்த்தல்.

இந்த நிகழ்வு அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதுடன், ஆரோக்கியமான வாழ்க்கை முறை குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது.

தாய்மொழி காக்க உயிர்நீத்த மொழிப்போர் ஈகியர்களுக்கு சிவகங்கையில் விசிக சார்பில் வீரவணக்கம்

சிவகங்கை ஜன 26.- தாய்மொழியாம் தமிழை காப்பதற்காகத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த மொழிப்போர் ஈகியர்களின் நினைவைப் போற்றும் வகையில், சிவகங்கை நகரில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வீரவணக்க நாள் நேற்று கடைபிடிக்கப்பட்டது.

நிகழ்வின் சிறப்பம்சங்கள்:

சிவகங்கை நகரில் அமைந்துள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலை அருகே, மொழிப்போர் ஈகியர்களின் திருவுருவப் படம் அலங்கரித்து வைக்கப்பட்டு மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்விற்கு விசிக மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் வெற்றி விஜயன் தலைமை தாங்கினார். ஈகியர்களின் படத்திற்கு மாலை அணிவித்து, முழக்கங்கள் எழுப்பி வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

பங்கேற்ற நிர்வாகிகள்:

இந்த வீரவணக்க நிகழ்வில் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் பலர் திரளாகக் கலந்து கொண்டனர்:

* மண்டலத் துணைச் செயலாளர்: முத்து ராசு
* மாவட்ட செய்தித் தொடர்பாளர்: ஆதிவளவன்
* ஒன்றியச் செயலாளர்: ராமதாஸ்

மேலும், மாவட்டப் பொறுப்பாளர்கள் சிவகங்கை சேது, சேட் முகமது, சூரக்குளம் ஆனந்த், விடுதலை கார்த்திக், அஜித் வளவன் மற்றும் கீழப்பூங்குடி அம்பேத், நெம்மேனி ஆறுமுகம், சக்கந்தி தீபக், மங்கலம் ரமேஷ், ரஞ்சித் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் பங்கேற்று தங்களது மரியாதையைச் செலுத்தினர்.

தாய்மொழிப் பற்றையும், ஈகியர்களின் தியாகத்தையும் இளைய தலைமுறைக்குக் கொண்டு செல்லும் வகையில் இந்த நிகழ்வு அமைந்ததாக நிர்வாகிகள் தெரிவித்தனர்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம் வன்னிக்குடி கிராமத்தில் உள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில், பழனி முருக பக்தர்கள் சார்பில் 56வது ஆண்டு சிறப்பு 11 அபிஷேகமும் பொங்கல் பூஜையும் நடைபெற்றது. இதில் முருக பக்தர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு வழிபாடு செய்தனர். நிகழ்வு பக்தி பரவசத்துடன் நடைபெற்றது.

மணப்பாறை அருகேதொழிலாளி கொலை வழக்கில் நான்கு பேர் கைது : விரைந்து செயல்பட்ட போலீசாருக்கு எஸ்.பி பாராட்டு

மணப்பாறை, ஜன 26,- திருச்சி மாவட்டம் மணப்பாறை அடுத்த காவல்காரன்பட்டியை சேர்ந்தவர் சிவசுப்பிரமணியன் வயது 51. வீடுகளுக்கு சிலிண்டர் வினியோகம் செய்யும் வேலை செய்து வந்தார். கடந்த 19ஆம் தேதி இரவு வீட்டின் முன் பகுதியில் கட்டிலில் தூங்கிய சிவசுப்பிரமணியன் 20 ஆம் தேதி காலை தலையில் ரத்த வெள்ளத்துடன் கொலை செய்யப்பட்டு பிணமாகக் கிடந்தார். இந்த சம்பவம் தொடர்பாக புத்தாநத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். மேலும் கூடுதல் போலீஸ் சூப்பிரெண்டு கிருஷ்ணன் மேற்பர்வையில் மணப்பாறை போலீஸ் துணை சூப்பர் காவியா தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு சம்பவம் நடந்த பகுதியில் இருந்த சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தினர். அப்போது சம்பவம் நடந்த நாளில் உடலை முழுவதுமாக மறைத்துக் கொண்டு கையில் இரும்பு கம்பியுடன் வாலிபர் ஒருவர் சென்றது சிசிடிவி கட்சியில் பதிவாகி இருந்தது. மேலும் போலீசார் நடத்திய விசாரணையில் கொலை சம்பவத்தில் ஈடுபட்டது காவல்காரன்பட்டியைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன் வயது 25 என்பதும் அதே பகுதியை சேர்ந்த 15 வயது பெண்ணை காதலித்ததை சிவசுப்ரமணியன் கண்டித்ததால் தான் கொலை செய்ததாகவும் போலீசாரிடம் தெரிவித்து உள்ளார்.மேலும் இந்த கொலை வழக்கில் ராதாகிருஷ்னன் காதலி மற்றும் கொலைக்கு உடந்தையாக இருந்த ராதா கிருஷ்ணன் தம்பி சேரன் வயது 20, சிவநேச செல்வன் வயது 19 உள்ளிட்ட 4 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

துரிதமாக செயல்பட்ட தனிப்படையை திருச்சி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு செல்வ நாகரத்தினம் பாராட்டி வெகுமதி அளித்தார்,

ஒத்தக்கடையில் இலவச கண் பரிசோதனை முகாம்

மதுரை, ஜன.26,- அகில பாரத ஐயப்ப சேவா சங்கம் யா.ஒத்தக்கடை கிளை மற்றும் அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து, ராஜகம்பீரம் ஜெயின்ட் ஆண்டனிஸ் அகாடமி பள்ளியில் இலவச கண் பரிசோதனை முகாம் நடத்தினர்.முகாமில் கண் புரை, சர்க்கரை நோய் உள்ளிட்ட பல்வேறு கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.260 பேருக்கு இலவச பரிசோதனை செய்யப்பட்டது.இதில் 30 பேர் இலவச கண் அறுவை சிகிச்சைக்காக அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். முகாமை மாவட்ட தலைவர் குருசாமி, மாவட்ட செயலாளர் பாலமுருகன் தொடங்கி வைத்தனர்.ஒத்தக்கடை கிளை நிர்வாகிகள் மற்றும் மருத்துவ குழுவினர் முகாமை சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

கோரிப்பாளையம் மேம்பால பணிகளை அமைச்சர்கள் ஆய்வு

மதுரை, ஜன.26,- மதுரை மாவட்டம் கோரிப்பாளையம் சந்திப்பில், நெடுஞ்சாலை துறை சார்பில் ரூ.190 கோடி மதிப்பீட்டில், 2100 மீட்டர் நீளத்தில் கட்டப்பட்டு வரும் மேம்பால பணிகளை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் இன்று ஆய்வு செய்து பார்வையிட்டனர்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் இரா. செல்வராஜ் இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி மற்றும் மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் ஆகியோர் உடன் இருந்தனர்.

மேம்பால பணிகள் விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அமைச்சர்கள் அறிவுறுத்தினர்.

ஆலந்தூர் துலுக்கானத்தம்மன் கோயில் மகா கும்பாபிஷேகம்

சென்னை, ஜன.26,- ஆலந்தூர் மாரீசன் தெருவில் அமைந்துள்ள 200 ஆண்டுகள் பழமையான ஸ்ரீ துலுக்கானத்தம்மன் திருக்கோயிலில் ஜீர்னோதான அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

அருள்மிகு துலுக்கானத்தம்மன், விநாயகர், முருகன், துர்க்கை, வைஷ்ணவி மற்றும் நவகிரகங்களுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

விழாவை 162வது வார்டு மாமன்ற உறுப்பினர் சாலமோன் தலைமையில், தலைவர் மாரிசன் ரவி, பொருளாளர் மாரிமுத்து மற்றும் திருப்பணி குழு ஒருங்கிணைத்தனர்.

திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

வருகை தந்த பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

■ திண்டுக்கல் சிலுவத்தூர் சாலையில் உள்ள எஸ்.எஸ்.எம்.வி பள்ளியில் டேலன்ட்டியா 2026 என்ற நிகழ்ச்சி மற்றும் 5ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்கள் தமிழ் மற்றும் ஆங்கில பேச்சு, வாக்கியங்களை தலைகீழாக வாசித்தல், எண்கள் மூலம் அல்பபெட் சொல்லுதல், வீணை, கீபோர்டு வாசித்தல் என தனித்திறமைகளில் அசத்தினர். இறுதியில் போட்டிகளில் வெற்றி பெற்ற அனைவருக்கும் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது

ஏன் அவசரம்' எனும் சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வு குறும்படத்தின் குறுந்தகடு வெளியீடு

மதுரை ஜன 26,- மதுரை மாநகர காவல் துறை ஆணையர் முனைவர் j லோகநாதன் ips 'ஏன் அவசரம்' எனும் சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வு குறும்படத்தின் குறுந்தகடு வெளியீடு செய்யப்பட்டு, படக்குழுவினருக்கு கேடயமும், பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்பட்டது ..37 வது தேசிய சாலைபாதுகாப்பு மாதத்தினை முன்னிட்டு பல்வேறு சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன அதன் ஒரு பகுதியாக 'ஏன் அவசரம்' எனும் சாலைபாதுகாப்பு விழிப்புணர்வு குறும்படம் மதுரை மாநகர போக்குவரத்து காவல் துறையின் சார்பாக தயாரிக்கப்பட்டுள்ளது..

இந்த குறும்படத்தில் பிரபல திரைப்பட நகைச்சுவை நடிகர் மதுரை முத்து அவர்கள் நடித்தும் திலகர் திடல் போக்குவரத்து காவல் ஆய்வாளர் தங்கமணி கதை வசனத்தில்,

C. G. விபின் ஆக்கத்தில் R.. P. காளிதாஸ் அவர்கள் இயக்கியுள்ளார்.. ஒளிப்பதிவு சென் செந்தில், இசை ஜெயஸ்ரீ தாஸ், படத்தொகுப்பு சூரியப்பிரகாஷ் மேற்கொண்டுள்ளனர்.. சிரிப்பும் சிந்தனையும் கொண்ட இந்த விழிப்புணர்வு குறும்படத்தில் இன்றைய நாட்களில் வீட்டில் தாமதமாக புறப்பட்டுவிட்டு அந்த நேரத்தை ஈடுகட்ட சாலையில் வேக வேகமாகவும் அவசரமாகவும் பதற்றதுடன் செல்வதால் ஏற்படக்கூடிய விபரீதங்கள் குறித்தும் அதன் விளைவுகளால் அடையும் உடல், பொருளாதார ரீதியான இழப்புகள் குறித்தும் சிரிப்பும், சிந்தனையும் கலந்து இன்றைய தலைமுறையினர் சமூக அக்கறையுடன் செயல்பட வேண்டிய அவசியம் குறித்தும் சாலைபாதுகாப்பு உயிர்ப்பாதுகாப்பு என்பதனை விளக்கி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

செங்குன்றம் ஸ்ரீ லட்சுமி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம்



திருவள்ளூர், ஜன 26,- திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், செங்குன்றத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ லட்சுமி அம்மன் ஆலயத்தில் புனராவர்த்தன ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீ லட்சுமி அம்மன், செங்குன்றம் நகரின் கிராம தேவதையாக அமர்ந்து அருள்பாலித்து வரும் நிலையில், ஸ்ரீ விசுவாவசு வருடம், தை மாதம் பஞ்சமி திதி, புரட்டாதி நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் கும்ப லக்னத்தில் யாக வேள்வி பூஜைகளுடன் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்த விழா செங்குன்றம் சுற்றுவட்டார ஆயிர வைசிய செட்டியார் நல சங்கம் மற்றும் ஊர் பொதுமக்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவின் போது மூன்று நாட்களாக ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

தாம்பரத்தில் 40 வருட பழமையான பள்ளியில் 39வது ஆண்டு விளையாட்டு போட்டியினை காவல் உதவி ஆணையாளர் கலந்து கொண்டு துவக்கி வைத்தார்

சிலம்பாட்டம், கராத்தே, ஓட்டப்பந்தயம் உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் கோப்பைகள் வழங்கப்பட்டது

செங்கல்பட்டு, ஜன.26- செங்கல்பட்டு மாவட்டம் கிழக்கு தாம்பரத்தில் உள்ள 40வருடங்களாக இயக்கி வரும் எம்சிசி கேம்பஸ் மெட்டிரிக்குலோஷன் மேல் நிலைப் பள்ளியின் 39வது ஆண்டு விளையாட்டு தினம் நடைபெற்றதுஇந்நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராகதாம்பரம் காவல் நிலைய உதவி ஆணையாளர் எஸ். நெல்சன் கலந்து கொடியேற்றி விளையாட்டு நிகழ்ச்சிகளை தொடங்கி வைத்தார் பின்னர் பள்ளி மாணவர்கள் சிறப்பு விருந்தினருக்கு கொடி அணிவகுப்பு செய்தனர். அதனத்தொடர்ந்துசிலம்பாட்டம், கராத்தே, ஓட்டப்பந்தயம் விளையாட்டு மற்றும் மாணவர்கள் பல்வேறு சாகசங்களை செய்து காட்டி விருந்தினர்களையும் பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் மெய் சிலிர்க்க வைத்தனர்.

முடிவில் சிலம்பாட்டம் கராத்தே ஓட்டப்பந்தயம் உள்ளிட்ட விளையாட்டுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் மற்றும் கோப்பைகளை பள்ளி தாளாளர் டாக்டர்.ஜி.ஜே.மனோகர், பள்ளி முதல் வர் சபீன் பால், துணை முதல்வர் ஜஸ்டின் ஜெபா ஆகியோர் வழங்கி சிறப்பித்தினர்.

■ கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில், 16 வது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் நேற்று கொடியசைத்து துவக்கி வைத்து, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கோபு, கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், வட்டாட்சியர் ரமேஷ், தனி வட்டாட்சியர்கள் வெங்கடேசன், குருநாதன், நகராட்சி ஆணையர் சத்தீஷ் குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் உமாசங்கர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

கொடைக்கானலில் மரம் வெட்டி கடத்தப்பட்டதில் சஸ்பெண்ட் செய்யப்பட்ட வனவர் விசாரணையின் போது தப்பி ஓட்டம்

கொடைக்கானல், ஜன 26-. திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மன்னவனூர் வனப்பகுதியில் முறைகேடாக மரங்கள் வெட்டி கடத்தப்பட்டது தொடர்பாக மன்னவனூர் ரேஞ்சர் ,2 வனவர்கள், ஒரு வனக்காப்பாளர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர் மேலும் 31 பேரிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 20 பேர் பணியிட மாற்றமும் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் வன குற்றவியல் பிரிவு வன பாதுகாவலர் ராகுல் தலைமையில் சஸ்பெண்ட் செய்யப்பட்ட வனத்துறையினரிடம் கொடைக்கானல் DFO அலுவலகத்தில் விசாரணை நடைபெற்றது விசாரணையை வனவர் சுபாஷ் மொபைல் போனில் பதிவு செய்ததை தொடர்ந்து வாக்குவாதம் ஏற்பட்டது அங்கிருந்து தப்பி ஓடினார் சக வனத்துறையினர் விரட்டிப் பிடிக்க முயற்சி செய்து முடியவில்லை.

வனத்துறையினர் தெரிவிக்கையில்: சுபாஷிடம் விசாரணை செய்த போது அதை செல்போனில் பதிவு செய்தது தெரியவந்தது செல்போனை காண்பிக்க தெரிவித்த போது மறுத்து வாக்குவாதம் செய்து தப்பி ஓடினார். வனத்துறையினர் பிடிக்க முயற்சி செய்தனர் என்றார்

காவேரிப்பட்டணத்தில் ரெட் கிராஸ் சொசைட்டி சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம்

காவேரிப்பட்டணம், ஜன,26- இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி காவேரிப்பட்டணம் துணை கிளை, கிருஷ்ணகிரி மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் மற்றும் கோவை அரவிந்த் கண் மருத்துவமனை உடன் இணைந்து காவேரிப்பட்டணம் ஜின்னா ரோடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது, பள்ளி தலைமை ஆசிரியர் ரமேஷ் முன்னிலையில் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கி துவக்கி வைத்தார் முகாமில் தொழிலதிபர்கள் சதீஷ், மணிகண்டன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர், முகாமிற்கான ஏற்பாடுகளை ரெட் கிராஸ் செயலாளர் சண்முகம், சேஷகிரி, ஆசிரியர் ஜெயபால் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். முகாமில் கலந்துகொண்ட 250 க்கும் மேற்பட்ட பொதுமக்களை கோவை அரவிந்த் கண் மருத்துவமனை மருத்துவக் குழுவினர் பரிசோதனை செய்தனர் இதில் கண்புரை அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்யப்பட்ட நபர்களை கோவை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.*

காங்கிரஸ் கமிட்டி மாவட்டத் தலைவராக மீண்டும் பொறுப்பேற்றுள்ள ஆர்.எஸ்.செந்தில் குமார் எம்சி அவர்களை சந்தித்து வாழ்த்து

தாம்பரம் ஜன 26- செங்கல்பட்டு வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி மாவட்டத் தலைவராக மீண்டும் பொறுப்பேற்றுள்ள ஆர்.எஸ்.செந்தில் குமார் எம்சி அவர்களை சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர் இதில் மாநில பொதுக்குழு உறுப்பினர் பிரின்ஸ், பன்னீர்செல்வம், இளைஞர் காங்கிரஸ் முன்னாள் மாநில பொதுச் செயலாளர் ஏ.ஜாபர்ஷா, தாம்பரம் மேற்கு பகுதி வட்ட தலைவர்கள் அக்பர், செல்வம், அப்துல்கனி, கேசவன்,

வட்ட துணைத் தலைவர்கள் ரியாஸ், லோகேஷ், யாசர் அரஃபாத்,

இளைஞர் காங்கிரஸ் மாவட்ட துணைத் தலைவர் ஜே.பி.விக்னேஷ், மார்ட்டின், தாம்பரம் சட்டமன்ற தொகுதி து.தலைவர் எஸ்.மஸ்தான்

ஆகியோர் உடன் இருந்தனர்.

கிருஷ்ணகிரியில் விசிக சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி

கிருஷ்ணகிரி,ஜன,26- கிருஷ்ணகிரியில் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்தி திணிப்பை எதிர்த்து போராடி உயிரிழந்தவர்களை நினைவுகூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25ம் தேதி மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் அனுசரிக்கப்படுகிறது. அந்த வகையில் கிருஷ்ணகிரி ஐந்து ரோடு ரவுண்டான பகுதியில் மத்திய மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மாவட்ட செயலாளர் தமிழ் மணி தலைமையில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு மண்டல துணைச் செயலாளர் தங்க தியாகு முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக முன்னாள் மாவட்ட செயலாளர் கனியமுதன் கலந்து கொண்டு மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்கத்தை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் சசிகுமார், பொருளாளர் ரகு, மாநிலத் துணைச் செயலாளர் பாலன், நகர துணைச் செயலாளர் கணபதி, நிர்வாகிகள் மணி ஜெகநாதன், சரவணன், பிரதாப், சாமுவேல், ராஜேந்திரசோழன், லட்சுமணன், ஆட்டோ குமார், வேலு கண்ணதாஸ், ரஜினி, சுரேஷ், அருண், சரவணன், சுரேஷ்குமார், கோவிந்தராஜ், அன்பு, மாதேஷ், பிரதீப், இனியவன், காளிதாஸ், ராஜதுரை, பெரியசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

■ கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை சார்பாக, முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா இது நம்ம ஆட்டம் 2026 விளையாட்டு போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் ஆகியோர் நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தனர். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் கவிதா, மாவட்ட விளையாட்டு நலன் அலுவலர் நடராஜ முருகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மதன்குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

பெருங்களத்தூரில் தவெகவின் கட்சி சின்னமான விசிலை வழங்கும்போது பொதுமக்கள் , மாணவர்கள், குழந்தைகள் விசிலை பெற்று கொண்டு விசிலடித்து தங்களது ஆதரவை தெரிவித்தனர்

பட்டாசு வெடித்தும், பொதுமக்களுக்கு விசில் மற்றும் இனிப்பு வழங்கி உற்சாக கொண்டாட்டம்

செங்கல்பட்டு, ஜன.26- செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூரில் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்திற்கு தேர்தல் ஆணையம் விசில் சின்னத்தை ஒதுக்கியுள்ளது. இதைத் தொடர்ந்து தாம்பரம் அடுத்த பெருங்களத்தூர் பகுதி தமிழக வெற்றி கழகம் சார்பில் அக்கட்சியினர் பட்டாசு வெடித்தும், பொதுமக்களுக்கு விசில் மற்றும் இனிப்பு வழங்கியும் உற்சாக கொண்டாடினர். பெருங்களத்தூர் ரவுண்டானா பகுதியில் பகுதி செயலாளர் செந்தில்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த கொண்டாட்டத்தில், தொண்டர்கள் விசில் அடித்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

மேலும் அந்த வழியாக வந்த பொதுமக்கள் , மாணவர்கள், குழந்தைகள் விசிலை பெற்று கொண்டு விசிலடித்து தங்களது ஆதரவை தெரிவித்து தவெக தொண்டர்களை உற்சாகப்படுத்தியது.

சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள கட்சி தயாராகி வரும் நிலையில் இந்த சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.

“வாக்களிப்பது அரசியலமைப்பு உரிமை மட்டுமல்ல” பிரதமர் மோடி பகிர்வு

புதுடெல்லி, ஜன.26- இந்தியத் தேர்தல் ஆணையம் நிறுவப்பட்டதை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் ஜனவரி 25ம் தேதி ‘தேசிய வாக்காளர் தினம்’ கடைபிடிக்கப்படுகிறது. இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி, விசீ பாரத் தன்னார்வலர்களுக்கு கடிதம் எழுதி உள்ளார். அதில் அவர் கூறியுள்ளதாவது:

“ஜனநாயகத்தில் வாக்களிப்பது மிக முக்கிய உரிமையும், பொறுப்பும் ஆகும். வாக்களிப்பது அரசியலமைப்பு உரிமை மட்டுமல்ல இந்தியாவின் எதிர்காலத்தில் கட்டமைக்கும் பணியில் பங்கேற்பதற்கான ஒரு அடையாளம்.

நமது வளர்ச்சிப் பயணத்தின் வழிகாட்டிகள் வாக்காளர்கள்தான். விரலில் இடப்படும் அந்த அழியாத மை, நமது ஜனநாயகம் துடிப்பானதாகவும் நோக்கமுள்ளதாகவும் இருப்பதை உறுதி செய்யும் ஒரு கவுரவச் சின்னமாகும். இந்த பணியில் முதல் முறையாக வாக்களிக்க உள்ள வாக்காளர்களை மனமார வரவேற்கிறேன். அவர்களை ஜனநாயக கடமையாற்ற அழைக்கிறேன்.

தேர்தலில் வாக்கு செலுத்துவதன் முக்கியத்துவத்தை விசீ பாரத் தன்னார்வலர்கள் வாக்காளர்களிடம் எடுத்துரைக்க வேண்டும். ஜனநாயகத்தின் உணர்வை நாம் மதிப்போம். இதில் பங்கேற்பதன் மூலம் வளர்ந்த பாரதத்தின் அடித்தளத்தை வலுப்படுத்துவோம்” என்றார்.

தாராபுரம் மதரஸத்துல் முகம்மதியாவில் 25ஆவது வெள்ளி விழா திருக்குர்ஆன் மனப்பாடம் முடித்த 6 மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது!

திருக்குர்ஆன் முழு மனப்பாடம் பயிற்சி முடித்தோர் பட்டமளிப்பு விழா உற்சாகத்தில் நிறைவு

சிறப்பு பரிசுகள், உலகெங்கிலும் இமாமாக சேவை செய்வோர் உருவாகும் எதிர்பார்ப்பு

தாராபுரம், ஜன.26- தாராபுரம் மத்திய பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள மதரஸத்துல் முகம்மதியா அரபி பாடசாலை தனது 25 ஆவது வெள்ளி விழா (Annual Day) கொண்டாடியது. இச்சுற்று பாடசாலை கடந்த 1999 ஆப்பட்டது திறக்கப்பட்டு இஸ்லாமிய மாணவர்களுக்கு திருக்குர்ஆனை முழுமையாக மனம்பாடம் செய்து ஒப்புவிக்கும் பயிற்சி மற்றும் அரபிக் கல்வியை வழங்கி வருகிறது.

இந்த ஆண்டு விழாவின் முக்கிய நிகழ்ச்சி திருக்குர்ஆன் முழு மனப்பாடம் முடித்த மாணவர்கள்க்கு பட்டமளிப்பு விழா எனும் நீதி. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பயிற்சி முடித்து தேர்ச்சி பெற்ற மொத்தம் 6 மாணவர்களுக்கு “அல்ஹாபில்” எனப்படும் பட்டத்தை வழங்கப்பட்டது. இதில் மாணவர்கள் திருக்குர்ஆன் 30 புத்தகங்களை மனப்பாடம் செய்து முடித்தனர் என்பது இஸ்லாமிய சமயத்தில் மிகுந்த பெருமை வாய்ந்த செயல் என குறிப்பிடப்பட்டது.

பட்டம் வழங்கும் நிகழ்ச்சியை பள்ளிவாசல் டிரஸ்ட் தலைவர் டாக்டர் சௌகத் அலி தலைமையில், செயலாளர் ஓய்வு பெற்ற தாசில்தார் லியாகத் அலி, ஹாஜி சிராஜுதீன், என்.ஏ.எச்.சுலைமான், ஹாஜி அப்துல் பாசித், ஓய்வு பெற்ற துணை ஆட்சியர் பீர் ஜாபர் ஆகியோர் முன்னிலையில் நடத்தின. பட்டங்களை ஈரோடு தாவுதியா அரபிக் கல்லூரியின் முதல்வர் அல்ஹாஜ் முகமது யூசுப் வழங்கி மாணவர்களை வாழ்த்தினார்.

அறிவிக்கப்பட்டபடி, இ பட்டம் பெற்ற மாணவர்கள் உலகெங்கிலும் உள்ள பள்ளிவாசல்களிலும் முன்னணி இமாமாக பொறுப்பு ஏற்ற, இறை வணக்கம் வழிபாடு நடத்தும் தகுதியை பெற்றதாகவும் இதில் வலியுறுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் மேலும் இரு பேராசிரியர்கள்க்கு பாடசாலை மாணவர்களின் சார்பாக சிறப்பு பரிசுகளாக ரூ. 2.50 லட்சம் மதிப்பு வாய்ந்த இருசக்கர வாகனங்கள் வழங்கப்பட்டன. இது அவர்களது அர்பித் கல்வியல் நீண்ட சேவை மற்றும் அர்ப்பணிப்பிற்கான நன்றி உணர்வு என விளக்கப்பட்டது.

படிப்பை முடித்து பட்டம் பெற்ற ஒவ்வொரு மாணவருக்கும் திருக்குர்ஆன் பிரதிகள், சிறப்பு ஆடைகள் மற்றும் பராமரிப்பு பொருட்கள் பரிசாக வழங்கப்பட்டன, இது அவர்களது அடுத்த பயணத்திலும் உதவும் வகையில் ஏற்பாடாக இருந்தது.

இந்த உள்ளூர் விழாவில் ஏராளமான இஸ்லாமிய ஆண் பெண் பொதுமக்கள் கலந்துகொண்டனர், அனைவருக்கும் அசைவ உணவு வழங்கி நிகழ்ச்சி சிறப்பாக நிறைவு பெற்றது.

திருக்குர்ஆன் மனனம் செய்த மாணவர்களுக்கு பாராட்டு விழாவில்:

திருக்குர்ஆனை முழுமையாக மனனம் செய்து முடித்த மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் பாராட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில், பல ஆண்டுகளாக தொடர்ந்து பயிற்சி பெற்று திருக்குர்ஆனை மனனம் செய்த மாணவர்களுக்கு பட்டங்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

திருக்குர்ஆன் இஸ்லாமியர்களின் புனித வேதமாகும். அதனை மனனம் செய்வது மிகுந்த பொறுமை, ஒழுக்கம் மற்றும் அர்ப்பணிப்பை தேவைப்படுத்தும் செயலாகும். மாணவர்களின் கடின உழைப்பை சமூக ரீதியாக அங்கீகரித்து, அவர்களின் தன்னம்பிக்கையை உயர்த்தும் வகையில் இந்த பாராட்டு விழா நடத்தப்பட்டது.

மேலும், இவ்விழா மற்ற மாணவர்களுக்கும் திருக்குர்ஆன் மனனம் பயில ஊக்கம் அளிக்கும் வகையில் அமைந்தது. இஸ்லாமிய கல்வி மரபை பாதுகாத்து, அதை எதிர்கால தலைமுறைகளுக்கு கொண்டு செல்லும் நோக்கமும் இதில் வலியுறுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு துணை நின்ற ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மதரஸா நிர்வாகிகளின் பங்களிப்பும் பாராட்டப்பட்டது. திருக்குர்ஆன் மனனம் செய்த மாணவர்கள் நல்லொழுக்கத்துடன் சமூகத்திற்கு பயனுள்ளதாக வாழ வேண்டும் என்றும் நிகழ்ச்சியில் தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டதை அறிவித்து நடைமுறைபடுத்திய

முதலமைச்சருக்கு நடைபெரும் பாராட்டு விழாவில் மாநிலம் முழுவதிலும் இருந்து 40 ஆசிரியர்கள் பங்கேற்கவுள்ளனர்

தாம்பரத்தில் நடைபெற்ற தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம்

தாம்பரம், ஜன.26 காஞ்சிபுரம் குன்றத்தூர் ஒன்றியம் வரதராஜபுரத்தில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் மாநில செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் அதன் தலைவர் கு.தியாகராஜன் தலைமையில் தாம்பரத்தில் நடைபெற்றது இதில் சென்னை செங்கல்பட்டு காஞ்சிபுரம் திருவள்ளூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர் அப்போது முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது,

தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிது உடனடியாக அமுல்படுத்திய தமிழ்நாடு அரசு உறுதியளிக்கப்பட்ட ஓய்வு திட்டத்தை வழங்கியமைக்கு அவருக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது,

இதேபோல் ஜாக்டோ ஜியோ சென்னையில் நந்தனத்தில் நடத்தும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு பாராட்டுதல் மற்றும் நன்றி அறிவித்தல் மாநாட்டில் தமிழ்நாடு ஆசிரியர் சங்கத்தை சேர்ந்த 40,000 ஆசிரியர்கள் மாநிலம் முழுவதும் இருந்து கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது,

மேலும் இதே போல் அகவிலைப்படி சரண்டர் விடுப்பு உள்ளிட்ட பல்வேறு பலன்களை தந்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

அப்போது செய்தியாளரிடம் பேசிய தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் கு.தியாகராஜன்:

22 ஆண்டுகளாக அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பழைய ஓய்வூதிய திட்டத்துக்காக போராடி வந்தனர் அப்போது அதிமுகவும் கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்தது ஆனால் எந்த விதத்திலும் நிறைவேற்ற முன்வரவில்லை ஆனால் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை குறித்து விமர்சனம் செய்கிறார்கள் இதே போல் தான் பாஜகவினரும் விமர்சனம் செய்கிறார்கள் அவர்கள் நினைத்தால் தேச முழுவதும் ஒரே நேரத்தில் அறிவித்து அனைத்து மாநிலத்தில் உள்ள ஆசிரியர்களின் நலன் காக்கலாம் ஆனால் அதுபோல் அறிவிப்பு எதுவும் இல்லை,

அதுபோல் பாஜக ஆளும் மாநிலத்தில் கூட பென்ஷன் வழங்குகிறதா என பார்க்க வேண்டிய சூழல் உள்ளது ஏழு மாநிலங்களில் பென்ஷன் திட்டத்திலும் பாஜக தடையாக உள்ளதாக எங்களுக்கு தகவல் உள்ளது தற்போது தமிழ் நாடு அரசு அறிவித்துள்ள உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை விமர்சிப்பது ஏன் என பாஜக, அதிமுகவை கேள்வி எழுப்பினார்,

இப்போது அறிவிக்கப்பட்டுள்ள இந்த தமிழ்நாடு அரசு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தில் 10% பங்களிப்பு அளிக்க வேண்டும் என்பதை இந்த முதல்வரே விரைவில் விலக்கு அளிப்பார் என நாங்கள் எதிர்பார்க்கிறோம் பல்லாண்டு கனவை அறிவித்து உடனடியாக புத்தாண்டிலேயே அதனை செயல்படுத்திய நடைமுறைப்படுத்திய துணிச்சல் மிகுந்த முதல்வர் இந்த முதல்வருக்கு மட்டுமே உள்ளது என நாங்கள் அவருக்கு நன்றி கடன் பட்டுள்ளோம் என தமிழ்நாடு ஆசிரியர் முன்னற்ற சங்கத்தின் தலைவர் கு.தியாகராஜன் தெரிவித்தார்.

திருப்பதியில் ரதசப்தமி விழா கோலாகலம் 7 வாகனங்களில் மலையப்ப சுவாமி பவனி: ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்

திருமலை, ஜன.26- திருப்பதி ஏழுமலையான் கோயிலில் இன்று ரதசப்தமியையொட்டி ஒரே நாளில் 7 வாகனங்களில் மலையப்ப சுவாமி மாட வீதிகளில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார்.திருப்பதி ஏழுமலையான் கோயிலில் ரதசப்தமி விழா இன்று காலை கோலாகலமாக தொடங்கியது. இன்று காலை முதல் இரவு வரை மலையப்பசுவாமி பிரம்மோற்சவ நாட்களில் நடைபெறும் 7 வாகனங்களில் மாடவீதிகளில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார். இதனை ‘மினி பிரமோற்சவம்’ என அழைக்கப்படுகிறது.

அதன்படி இன்று அதிகாலை 5.30 மணியளவில் முதல் வாகன சேவையாக வாகன மண்டபத்தில் இருந்து 7 குதிரைகள் பூட்டிய சூரிய பிரபை வாகனத்தில் மலையப்பசுவாமி சிவப்பு பட்டு வஸ்திரம் உடுத்தி, தங்க, வைர ஆபரணங்கள் அணிந்து, சிவப்பு நிற பூமாலை சூடி மாடவீதியில் எழுந்தருளினார். மாட வீதியில் வடமேற்கு பகுதியில் சூரிய உதயத்திற்காக மலையப்ப சுவாமி சிறிது நேரம் காத்திருந்தார். காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக மேகமூட்டத்துடன் லேசான சாரல் மழை பெய்தது. தொடர்ந்து 7.15 மணியளவில் மலையப்ப சுவாமிக்கும் கற்பூர ஆரத்தி காண்பிக்கப்பட்டது. அப்போது பக்தர்கள் ‘கோவிந்தா கோவிந்தா’ என தரிசனம் செய்தனர். தொடர்ந்து மாட வீதியில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

காலை 9 முதல் 10 மணி வரை சின்னசேஷ வாகனத்திலும், 11 மணி முதல் மதியம் 12 மணி வரை கருட வாகனத்திலும், மதியம் 1 முதல் 2 மணி வரை அனுமந்த வாகனத்திலும் மலையப்பசுவாமி பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். மாடவீதிகளில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமியை தரிசனம் செய்தனர். இதைதொடர்ந்து ஏழுமலையான் கோயில் தெப்பக்குளத்தில் சக்ரத்தாழ்வார் தீர்த்தவாரி நடைபெற்றது. தொடர்ந்து சக்கரத்தாழ்வாருக்கு மகா தீபாராதனை நடைபெற்றது. இதையடுத்து ஏராளமான பக்தர்கள் தெப்பக்குளத்தில் புனித நீராடினர்.

தொடர்ந்து மாலை 4 முதல் 5 மணி வரை கற்பக விருட்ச வாகனத்திலும், 6 முதல் இரவு 7 மணி வரை சர்வபூபால வாகனத்திலும், இரவு 8 முதல் 9 மணி வரை சந்திரபிரபை வாகனத்திலும் மலையப்பசுவாமி அருள்பாலிக்க உள்ளார். ரதசப்தமியொட்டி கோயிலில் நித்யசேவைகள், நேர ஒதுக்கீடு டிக்கெட், விஐபி தரிசனம் ஆகியவை ரத்து செய்யப்பட்டுள்ளது. சுவாமி வீதி உலா வருவதை காண்பதற்காக லட்சக்கணக்கான பக்தர்கள் திருமலையில் குவிந்துள்ளனர். 4 மாட வீதி மற்றும் வைகுண்டம் காத்திருப்பு அறையில் உள்ள பக்தர்களுக்கு தொடர்ந்து பால், காபி, மோர் அன்னப்பிரசாதம் வழங்கப்பட்டு வருகிறது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161